**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

**முன்னிலை: திரு.ஸ்வர்ணம் J.ராஜகோபாலன், B.A., B.L.,(Hons.)**
**கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

**2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09-ம் நாள் வியாழக்கிழமை**

**E.P.No.85/2024**

**in**

**O.S.No.65/201**

**E.A.1/2026 in E.P.85/2024 and E.A.2/2026 in E.P.85/2024**

நசீம் பாத்திமா .. தீர்ப்பாணை பெற்றவர் /2ம் வாதி

– எதிர் –

M.D.முகமது சித்திக் ... தீர்ப்பு கடனாளி / 2ம் பிரதிவாதி

இம்மனுவானது 08.04.2026-ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.S.காந்திமதிநாதன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கணேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொது உத்தரவு**

**E.P.No.85/2024**

இந்நிறைவேற்று மனுவானது தீர்ப்பு கடனாளி, தீர்ப்பாணை பெற்றவருக்கு B அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 2வது அயிட்ட சொத்தை காலி செய்து சுவாதீனம் (vacant possession) ஒப்படைக்க உத்தரவிடக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 35-ன் கீழ் தாக்கல் மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**E.A.1/2026**

E.P.No.85/2024 நிறைவேறுதல் மனுவில் கண்ட சர்வே எண்.490 பார்ட், 491, 492 ஆகிய சொத்தை அரசு சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன்

Delivery எடுக்க உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன்படி 2ம் வாதி / மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**E.A.2/2026**

E.P.No.85/2024 நிறைவேறுதல் மனுவில் கண்ட சர்வே எண்.490 பார்ட், 491, 492 ஆகிய சொத்தை திண்டுக்கல் நகர் தெற்கு காவல் ஆய்வாளர் உதவியுடன் Delivery எடுக்க உத்தரவிடும்படி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன்படி 2ம் வாதி / மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

மனுவில் கண்டுள்ள சொத்து மற்றும் வேறு பல சொத்துக்களையும் A,B,C,செடியூல்களாக காட்டி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி சென்னை கூடுதல் சிட்டி சிவில் நீதிமன்றத்தில் அ.வ.எண்.65/2015 –ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும் போது எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதியின் தாயார் காலமாகி விட்டார். அதனை தொடர்ந்து மனுதாரர் / 2ம் வாதிக்கும், அவரது கணவரான 1ம் வாதிக்கும் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதிக்கும் இடையே பொது மனிதர்கள் செய்த சமரசத்தை உபயதரப்பாரும் ஒப்புக்கொண்டு அதன்படி அ.வ.எண்.65/2015 வழக்கில் 27.09.2019–ம் தேதி சமரச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையின்படி மனுதாரர்/2ம் வாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட B செடியூல் சொத்தில் 2வது அயிட்ட சொத்தை தீர்ப்புக்கடனாளி / 2ம் பிரதிவாதி, தீர்பாணை பெற்றவர்/2ம் வாதி வசம் மேற்படி சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கக் கோரி இந்நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிருரையின் சுருக்கம் :**

(அ) மனுதார் / 2ம்வாதி தாக்கல் செய்துள்ள நிறைவேறுதல் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுவில் கண்டபடி மனுதார் / 2ம்வாதிக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. இந்த மனுவைத் தாக்கல் செய்ய மனுதார் / 2ம்வாதிக்கு எந்தவித காரணமும், முகாந்திரமும் கிடையாது. வீண் விவகாரத்திற்காகவும் இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதிக்கு அலைக்கழிப்பையும், பணச் செலவையும் ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் உண்மைக்குப்பறம்பான சங்கதிகளைக் கண்டு மனுதார்

/2ம்வாதியால் இந்த நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதார் / 2ம்வாதியின் நிறைவேறுதல் மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியிருக்கிறது.

(ஆ) இந்த மனுவில் கண்ட சொத்து மற்றும் வேறு பல சொத்துக்களையும் A,B,C செடியூல்களாக காட்டி பாகப்பிரிவினைப் பரிகாரம் கேட்டு சென்னை கூடுதல் சிட்டி சிவில் நீதிமன்றத்தில் அ.வ.எண். 65 / 2015 வழக்கில் மனுதார் / 2ம்வாதியும், அவரது கணவர் ஷாநவாஸ் சாதிக் பாட்ஷா ஆக இருவரும் வாதிகளாக இருந்து, இந்த எதிர்மனுதார் /2ம்பிரதிவாதி மீதும், அவரது தாயார் ஜீனத்பீவி, காஜா நஜ்முதீன் மற்றும் திண்டுக்கல் கனரா வங்கி மீதும் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியின் தாயார் காலமாகி விட்டார். அதை தொடர்ந்து மனுதார் / 2ம்வாதிக்கும், அவரது கணவரான 1ம்வாதிக்கும், இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதிக்கும் இடையே பொது மனிதர்கள் செய்த சமரசத்தை உபயதரப்பாரும் ஒப்புக் கொண்டு அதன்படி மேற்படி அ.வ.எண். 65 / 2015 வழக்கில் 27.09.2019ம் தேதி சமரசத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி சமரசத் தீர்ப்பாணையின்படி சொத்துக்கள் அவரவருக்கு தனித்தனியே ஒதுக்கப்பட்டும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு 2 மற்றும் 5 லக்கச் சொத்துக்களின் பேரில் 3ம்பிரதிவாதியால், 4ம்பிரதிவாதியான திண்டுக்கல் கனரா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டிருந்தது. மேற்படி சமரசத் தீர்ப்பின்படி 2, 5 லக்கச் சொத்துக்களைப் பொறுத்து 4ம்பிரதிவாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன்களை மனுதாரர் / 2ம்வாதியின் கணவரான 1ம்வாதியும், இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியும் சேர்ந்து செலுத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

(இ) அதன்படி 4ம்பிரதிவாதியான கனரா வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை One time Settlement –ன்படி ரூ.1,17,00,000–00ம் என்று இறுதி செய்யப்பட்டது. அதில் மனுதார் / 2ம்வாதியின் கணவர் பாதி தொகையாக ரூ.58,50,000–00மும், இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதி பாதி தொகையாக ரூ.58,50,000–00மும் செலுத்தி மேற்படி கடனை தீர்க்க வேண்டும். ஆனால் மேற்படி 4ம்பிரதிவாதியின் வங்கிக் கடனுக்கு இந்த எதிர்மனுதார்/ 2ம்பிரதிவாதி ரூ.70,00,000/–

செலுத்தியுள்ளார். அதேசமயம் மனுதார் /2ம்வாதியும், அவரது கணவரான 1ம்வாதியும் ரூ.47,00,000–00ம் மட்டுமே செலுத்தியுள்ளனர். கூடுதலாக உள்ள ரூ.11,50,000–00ஐ இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதிக்கு, இந்த மனுதார் /2ம்வாதியும், அவரது கணவரான 1ம்வாதியும் சேர்ந்து செலுத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அந்த சமயத்தில் மனுதார் / 2ம்வாதியின் கணவரான 1ம்வாதி கடுமையான புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார்.

(ஈ) இந்நிலையில் எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதிக்கு செலுந்த வேண்டிய ரூ.11,50,000/–த்தை மனுதாரர் / 2ம் வாதியும், அவரது கணவரான 1ம்வாதியும் செலுத்த இயலாத நிலையில், இந்த மனுவில் கண்ட சொத்தை இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதிக்கே ஒப்படைத்து விட்டு கூடுதலாக பணம் கொடுக்கும்படி கோரிக்கை வைத்தனர். அத்துடன் ஆரம்பத்திலிருந்தே இந்த மனுவில் கண்ட சொத்து முழுவதும் எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியின் முழுக் கட்டுப்பாட்டிலும், சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது. இந்த மனுச் சொத்திற்கு ஏற்பட்ட வீட்டுவரி வகையறா அனைத்தையும் இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியே நாளது வரை செலுத்தி வருகிறார். ஆனால் மனுதார் / 2ம்வாதி நீண்டகாலமாக சென்னை, சிந்தாதிரிப்பேட்டை பகுதியில் வசித்து வந்து, கடந்த 8 மாதங்களுக்கு முன்பு சென்னையை விட்டு வெளியேறி மனுதார் / 2ம் ம்வாதியின் தாயாரான ஜவஹர்நிஷா வீடான நிலக்கோட்டை வட்டம், வத்தலக்குண்டு, பாட்ஷா தெரு, கதவு எண். 11–5–24 என்ற முகவரியில் தாயார் வீட்டில் வசித்து வருகிறார்.

(உ) மனுவில் கண்ட சொத்து சம்மந்தமாக இந்த மனுதார் /2ம்வாதிக்கும், அவரது கணவரான 1ம்வாதிக்கும் மற்றும் இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதிக்குமிடையே 2023ம் ஆண்டு ஜனவரி ஆரம்பத்தில் ஏற்பட்ட சமரசத்தின்படி இந்த மனுவில் கண்ட சொத்தில் தனக்கு தீர்ப்புப்படி எந்த பாகபாத்தியமும் வேண்டாமென்றும் அதற்கு பதிலாக பணம் கொடுத்து விடும்படி முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவின்படி ஏற்கனவே 4ம்பிரதிவாதியின் வங்கி கடனுக்காக மனுதார் / 2ம்வாதி, அவரது கணவர் ஆகியோருக்கு சேர்த்து செலுத்திய ரூ.11,50,000/–, இந்த மனுவில் கண்ட சொத்திற்காக வரவு வைக்கப்பட்டுள்ளது. அதை தவிர மனுதார் / 2ம்வாதியின் கணவரின் மருத்துவச்

செலவிற்காக 10.03.2023ம் தேதி ரூ.1,00,000/–மும், 19.03.2023ம் தேதி ரூ.50,000/– ஆக ரூ.1,50,000/–த்தை மனுதார் / 2ம்வாதி நேரில் ரொக்கமாகப் பெற்றுக் கொண்டார். அத்துடன் 20.03.2023ம் தேதி ஸ்டேட் பாங்க் பணப்பரிவர்த்தனை மூலம் ரூ.1,00,000/–, 21.03.2023ம் தேதி ரூ.50,000/–மும், 23.03.2023ம் தேதி ரூ.50,000/–மும், இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியிடமிருந்து வங்கிப் பணப்பரிவர்த்தனை மூலமாக மனுதார் 2ம்வாதிக்கு செல்லாகியிருக்கிறது. ஆக மனுவில் கண்ட சொத்தை இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதிக்கு விட்டுக் கொடுப்பதற்காக மனுதார் /2ம்வாதியும். அவரது கணவரும் சேர்ந்து மேலே கண்ட விபரப்படி ரூ.15,00,000–00 (பதினைந்து லட்சம்)ஐ பெற்றுக் கொண்டு விட்டார்கள். அதை தவிர இந்த மனுதார் / 2ம்வாதி மற்றும் அவரது கணவர் 1ம்வாதி, எதிர்மனுதார் /2ம்பிரதிவாதி ஆகியோர் மீது C.K.M.A.ஜமால் முகம்மதுவுக்கு செலுத்தவேண்டிய கடன், காசோலைகள் மற்றும் அவை சம்மந்தப்பட்ட நீதிமன்ற வழக்குகளை இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியே நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு செலவு செய்துள்ளார். அந்த வகையில் ரூ.50,000/–ம் இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியால் இந்த மனுதார் / 2ம்வாதிக்காகவும், அவரது கணவர் 1ம்வாதிக்காகவும் செலவு செய்துள்ளார். அத்துடன் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் மூவருக்காகவும் குற்ற வழக்கை ரத்துச் செய்யவும், ஜாமீன் கேட்டும் இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ.1,50,000/–ம் வரை செலவு செய்துள்ளார். மேலும் 4ம்பிரதிவாதியின் கனரா வங்கிக்கும், இந்த மனுதார் / 2ம்வாதி மற்றும் எதிர்மனுதார்கள் / 2ம்பிரதிவாதியின் வகையறாவுக்கு மதுரை D.R.T. Tribunal–ல் நிலுவையில் இருக்கும் வழக்கிற்காகவும் ரூ.1,00,000/–ஐ இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதி செலவு செய்துள்ளார்.

(ஊ) மேற்கண்ட சூழ்நிலைகளில் இந்த ஒப்படைப்பு மனுவில் கண்ட சொத்தில் மனுதார் / 2ம்வாதிக்கு உள்ள பாகப்பாத்தியத்தை ஏற்கனவே 2023ம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே விட்டுக் கொடுத்துவிட்டு, இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியிடம் மேலே கண்ட விபரப்படி மொத்தம் ரூ.15,00,000/–ஐ மனுதார் / 2ம்வாதி பெற்றுக் கொண்டு விட்டார். அத்துடன் மேற்கண்ட வழக்குகளுக்காகவும் இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதி ரூ.3,00,000/– செலவு செய்துள்ளார். இவற்றையும் உறுதிமொழிகளையும்

முற்றிலும் மறைத்து விட்டு, இந்த எதிர்மனுதார் /2ம்பிரதிவாதியிடமிருந்து செல்லான தொகைகளையும் மறைத்து, துர்லாபம் அடையும் எண்ணத்துடன் மனுதார் / 2ம் வாதியால் சட்ட விரோதமாக ஒப்படைப்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 27.09.2019ம் தேதி அசல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புக்குப்பின் உபயதரங்பபாருக்கு இடையே சமரசம் ஏற்பட்டு அதற்காக எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதியிடம் தொகைகள் பெற்றுக்கொண்டுவிட்டதால் தான் தீர்ப்பு ஏற்பட்டு இதுவரை ஒப்படைப்பு நடவடிக்கையை மனுதாரர் / 2ம் வாதி எடுக்கவில்லை. மனுவில் கண்ட சொத்தில் தன் பாகத்திற்காக ஏற்கனவே ரொக்கமாகவும், வேறு வகைகளிலும் இந்த எதிர்மனுதார் /2ம்பிரதிவாதியிடமிருந்து, மனுதார் / 2ம்வாதி ரொக்கம் பெற்றுக் கொண்டு விட்டார். அதனால் மனுச் சொத்தை மனுதார் /2ம்வாதி ஒப்படைப்பு சுவாதீனம் கோர அதிகாரமில்லை. எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியிடருந்து மேற்கொண்டும் ஏதாவது பணம் பறிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணம் கொண்டு மனுதார் / 2ம்வாதியால் உண்மையை மறைத்து இந்நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுவில் கண்டபடி மனுதார் / 2ம்வாதிக்கு ஒப்படைப்பு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல.

4. இந்நிறைவேற்று தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்நிறைவேற்று மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இருதரப்பிலும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

6. இருதரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

7. மனுதார்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எடுத்துரைத்து மனுதார்களுக்கு தீர்ப்பின்படி மனுச் சொத்தை ஒப்படைப்பு செய்து கொடுக்க உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டுள்ளார். எதிர்மனுதார் தரப்பில் ஒப்படைப்பு மனுவில் கண்ட சொத்தில் மனுதார் / 2ம்வாதிக்கு உள்ள பாகப்பாத்தியத்தை ஏற்கனவே 2023ம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே விட்டுக் கொடுத்துவிட்டு, இந்த எதிர்மனுதார் / 2ம்பிரதிவாதியிடம் மேலே கண்ட விபரப்படி மொத்தம் ரூ.15,00,000/−ஐ மனுதார் / 2ம்வாதி பெற்றுக்

கொண்டு விட்டார் என்றும், மேற்படி சங்கதியை மறைத்து விட்டு, எதிர்மனுதார் /2ம்பிரதிவாதியிடமிருந்து செல்லான தொகைகளையும் மறைத்து, துர்லாபம் அடையும் எண்ணத்துடன் மனுதார் / 2ம் வாதியால் சட்ட விரோதமாக ஒப்படைப்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

8. மனுதார்/2ம் வாதி தீர்ப்பாணை பெற்றவர் ஆவார். மனுதார்/2ம் வாதி பெற்ற தீர்ப்பாணையை நிறைவேற்றக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவுடன் தாக்கல் செய்துள்ள சமரச தீர்ப்பாணையில் மனுவில் கண்டுள்ள சொத்து மற்றும் வேறு பல சொத்துக்களையும் A,B,C,செடியூல்களாக காட்டி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி சென்னை கூடுதல் சிட்டி சிவில் நீதிமன்றத்தில் அ.வ.எண்.65/2015 –ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் இருக்கும் போது எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதியின் தாயார் காலமாகி விட்ட நிலையில், மனுதாரர் / 2ம் வாதிக்கும், அவரது கணவரான 1ம் வாதிக்கும் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதிக்கும் இடையே பொது மனிதர்கள் செய்த சமரசத்தை உபயதரப்பாரும் ஒப்புக்கொண்டு அதன்படி அ.வ.எண்.65/2015 வழக்கில் 27.09.2019–ம் தேதி சமரச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையின்படி மனுதாரர்/2ம் வாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட B செடியூல் சொத்தில் 2வது அயிட்ட சொத்தை 2ம் பிரதிவாதி, 2ம் வாதி வசம் மேற்படி சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டுமென தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையின்படி மனுதாரர் / 2ம் வாதி வசம் எதிர்மனுதாரர் 2ம் பிரதிவாதி சுவாதீனம் ஒப்படைக்க தவறியதால் இந்நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. இந்நிலையில், E.A.1/2026 என இடைநிறைவேற்று மனு தாக்கல்செய்யப்பட்டு, மேற்படி மனுவில், E.P.85/2024 நிறைவேற்று மனுவில் கண்ட சர்வே எண்.490 பார்ட், 491, 492 –ல் மேற்படி சொத்தை அரசு சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் Delivery எடுக்க உத்தரவிடக் கோரி ஒரு மனுவும், மேற்படி நிறைவேறுதல் மனுவில் கண்ட சர்வே எண்.409 பார்ட், 491, 492ல் மேற்படி சொத்தை திண்டுக்கல் நகர் தெற்கு காவல் ஆய்வாளர், உதவியுடன் Delivery எடுக்க E.A.02/2026 மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. மேற்படி இரண்டு இடைநிறைவேற்று மனுக்களிலும் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்து கீழ்கண்டவாறு முன் வைத்துள்ளார்.

E.A.1/2026–ன் எதிருரையில்,

" மனுதாரர் / 2ம் வாதிக்கு நீதிமன்ற உத்தரவுப்படி ஒப்படைப்பு செய்ய வேண்டியதும், நான்குமால்களுக்கு சம்மந்தப்பட்டதுமான தென்வடலாக உள்ள 80 அடியிலும், கிழமேலாக 29 அடியிலும் உள்ள 2320 சதுரடியை நான் காலி செய்து ஒதுக்கி வைத்து விட்டேன். அந்த சொத்தை மனுதாரர் / 2ம் வாதி ஒப்படைப்பு சுவாதீனம் பெற்றுக்கொள்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது"

என்றும்,

E.A.2/2026 –ன் எதிருரையில்,

" மனுதாரர்/ 2ம் வாதி ஒப்படைப்பு கோரும் சொத்து சம்மந்தமாக நான் இதுவரை எந்தவித தகராறும் செய்யாமலும், சட்டம் ஒழுங்கு மற்றும் அமைதிக்கு என்னால் இது வரை எந்தவித குந்தகமும் ஏற்படாத நிலையில், திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய ஆய்வாளரின் உதவியென்பது தேவையற்ற ஒன்றாகும். மேலும், மனுவில் கண்ட சொத்தான 2320 சதுரடியை தென்வடலாக 80 அடி நீளத்திலும், கிழமேலாக 29 அடி அகலத்திலும் குறிப்பிட்ட நான்குமால்களுக்குள் மனுதாரர் / 2ம் வாதி சுவாதீனம் எடுப்பதை நான் எந்த வகையிலும் தடுக்கவோ, பிரச்சனை செய்யவோ மாட்டேன் என்பதையும் இதன் மூலம் உறுதி கூறுகிறேன்"

என்றும் முன் வைத்துள்ளார்.

11. தீர்ப்பாணை பெற்றவரான 2ம் வாதி நிறைவேறுதல் மனுவில் கண்ட சர்வே எண்.490 பார்ட், 491, 492 ஆகிய சொத்தை அரசு சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் திண்டுக்கல் நகர் தெற்கு காவல் ஆய்வாளர் உதவியுடன் சுவாதீனம் எடுக்க உதவி கோரியுள்ளார். மேற்படி இடைநிறைவேற்று மனுக்களின் எதிருரையில், மனுதாரர் / 2ம் வாதிக்கு நீதிமன்ற உத்தரவுப்படி ஒப்படைப்பு செய்ய வேண்டியதும், நான்குமால்களுக்கு சம்மந்தப்பட்டதுமான தென்வடலாக உள்ள 80 அடியிலும்,

கிழமேலாக 29 அடியிலும் உள்ள 2320 சதுரடியை நான் காலி செய்து ஒதுக்கி வைத்து விட்டேன். அந்த சொத்தை மனுதாரர் / 2ம் வாதி ஒப்படைப்பு சுவாதீனம் பெற்றுக்கொள்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது என்றும், மனுதாரர்/ 2ம் வாதி ஒப்படைப்பு கோரும் சொத்து சம்மந்தமாக நான் இதுவரை எந்தவித தகராறும் செய்யாமலும், சட்டம் ஒழுங்கு மற்றும் அமைதிக்கு என்னால் இது வரை எந்தவித குந்தகமும் ஏற்படாத நிலையில், திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய ஆய்வாளரின் உதவியென்பது தேவையற்ற ஒன்றாகும் என்று எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி முன் வைத்துள்ளார்.

12. மனுவில் கண்டுள்ள சொத்து மற்றும் வேறு பல சொத்துக்களையும் A,B,C செடியூல்களாக காட்டி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி சென்னை கூடுதல் சிட்டி சிவில் நீதிமன்றத்தில் அ.வ.எண்.65/2015 –ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில், மனுதாரர் / 2ம் வாதிக்கும், அவரது கணவரான 1ம் வாதிக்கும் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதிக்கும் இடையே பொது மனிதர்கள் செய்த சமரசத்தை உபயதரப்பாரும் ஒப்புக்கொண்டு அதன்படி அ.வ.எண்.65/2015 வழக்கில் 27.09.2019–ம் தேதி சமரச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி சமரச தீர்ப்பாணையின் அடிப்படையில், எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி, மனுதாரார் / 2ம் வாதிக்கு சொத்தின் சுவாதீனத்தை உடனடியாக ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்பதே சரியானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, B அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 2வது அயிட்ட சொத்தை காலி செய்து, மேற்படி சொத்தின் சுவாதீனத்தை (vacant possession), தீர்ப்பாணை பெற்றவர் / 2ம் வாதி வசம் ஒப்படைப்பு செய்யுமாறு தீர்ப்புகடனாளி / 2ம் பிரதிவாதிக்கு உத்தரவிடப்படுகிறது.

13. நிறைவேற்று மனுவில் கோரியபடி ஒப்படைப்பு பரிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், E.A.1/2026, E.A.2//2026 ஆகியவற்றில் எவ்வித உத்தரவும் வழங்க தேவையில்லை என மேற்படி மனுக்கள் முடித்து வைக்கப்படுகிறது. இந்நீதிமன்ற அமீனாவின் உதவியை பெற்றுக்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது.

**முடிவாக,** மனுச் சொத்தின் சுவாதீனத்தை மனுதார்/2ம் வாதி வசம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதி ஒப்படைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை. படிகட்டளை செலுத்த மூன்று நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது. ஒப்படைப்பு செய்ய வாய்தா 27.04.2026.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 09–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SWARNAM J RAJAGOPALAN
Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.04.18 15:32:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்

இருதரப்பிலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:
இல்லை.

SWARNAM J RAJAGOPALAN
Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.04.18 15:32:04 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்